பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 12 திங்கட்கிழமை 24.02.2025 கதிர் 108

## இது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்அரசுக்கட்சி, இலங்கைத்தமிழ்க் காங்கிரஷஸ் தவிர்ந்த 9 தமிழ்க் கட்சிகள்இணைந்துபோட்டியிடுவதற்கு இணங்கியுள்ளன என்று ☞2

# தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த ஆளும்தரப்பினர் தவறிவிட்டனர்

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு



நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த தற்போதைய அரசாங்கம் தவறிவிட்டது. இன்று நம் நாட்டில் பெரும் வன்முறை கலாசாரமும், கொலைகளும் அலைமோதுகின்றன. பாதாள உலகம் கோலோச்சி வருகின்றன. கொலை, கப்பம், போதைப்பொருள்கடத்தல்என்பன சமூகத்தில்தலைவிரித்தாடுகின்றன. தேசிய பாதுகாப்பு குறித்து பாடம் கற்க மேசை கதிரைகளைஎடுத்துக்கொண்டுவருமாறு அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சில தரப்பினர் இதற்கு முன்னர் நாட்டிற்கு பிரஸ்தாபித்திருந்தனர். அது எப்படி போனாலும் தேசிய பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் இன்று பாடம் கற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிமித்தம் ஐக்கிய மக்கள் சக்தியின் தெரணியகல தேர்தல் தொகுதி அமைப்பாளர்ரஞ்சித்பொல்கம்பொலவின் ஏற்பாட்டின்கீழ்தெரணியகலபிரதேசத்தில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதனைத் தெரிவித்தார்.

சமூகத்தில் சட்டம் மேலோங்கிக் காணப்பட வேண்டிய இன்றைய காலகட்டத்தில் சட்டம் குழிதோண்டி புதைக்கப்பட்டு வருகின்றது. இதுதான் நிலமையாகி வருகிறது. கொலையாளிகள் நாட்டின்சட்டம்ஒழுங்கின்தலைவர்களாக மாறிவிட்டனர். இந்த கொலைக் கலசாரம், தேசிய பாதுகாப்பு தொடர்பில்வீராப்புபேசிய இந்த ஆளும்தரப்பிடம் இதற்கான பதிலும் இல்லை, தீர்வும்இல்லை. நாட்டின்பிரச்சினைகளை தீர்ப்பதற்கே பெரும் மக்கள்ஆணையை ☞8

# லைகாவுக்கு எதிரான வழக்கு மார்ச் 27இல் விசாரணைக்கு

லைகா மொபைல் நிறுவனம் நாட்டில் உள்ள ஊடக நிறுவனங்களை கையகப்படுத்தும் செயல்முறையானது தனது அடிப்படை மனித உரிமைகளை மீறியுள்ளது என்றும் நிறுவனம் கையகப்படுத்திய சொத்துக்களை அரசாங்கத்திடம் திருப்பித் தர உத்தரவிட வேண்டும் என்றும் கோரி, இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான குடிமக்கள் அமைப்பின் தலைவர் ஜமுனி கமந்த துஷார தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனுவை மார்ச் 27 பரிசீலிக்க உயர் நீதிமன்றம் பெப்ரவரி 20 உத்தரவிட்டது.

இந்த மனு, காமினி அமரசேகர, குமுதுனி விக்ரமசிங்க மற்றும்சோபித ராஜகருணா ஆகிய மூன்று நீதிபதிகள் கொண்ட உயர்நீதிமன்ற அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. ☞8

# ஆளும்தரப்புக்கு ஆதரவு அதிகரிப்பு

வெரிட்டே ரிசர்ச்சின் கேலப் பாணியிலான (Gallup style) சமீபத்திய ஆய்வு சுற்றின் 'தேசத்தின் மனநிலை' கருத்துக்கணிப்பின்படி, 2024ஜூலைமாதத்தில்24சதவீதமாக இருந்த அரசு மீதான மக்கள் அங்கீகாரம் 2025 பெப்ரவரியில் 62 சதவீதம் என்ற உயர் நிலையை அடைந்துள்ளது. தேர்தலின் பின்னர் ஆளும்தரப்பின் மீது பொது மக்களுக்கு காணப்படும் அங்கீகாரம் அதிகரித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் பின்னர் முதல் முறையாக மக்கள் தொகையில் பெரும்பான்மையானவர்கள் (55சதவீதம்) இலங்கை பொருளாதாரமானது 'மேம்பட்டுள்ளதாக' சிந்திக்கின்றனர். எனினும் மக்கள் தொகையில் 47 சதவீதமானவர்கள் நாட்டின்பொருளாதார நிலைமையானது தற்போதும் 'மோசமான நிலைமையிலேயே' காணப்படுவதாக ☞8

### உள்ளாட்சித் தேர்தலில்

# சங்குச் சின்னத்தில் போட்டியிட 9 தமிழ்க் கட்சிகள் இணக்கம்

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சங்குச் சின்னத்தில் எதிர்வரும்உள்ளூராட்சிசபைத்தேர்தலில் போட்டியிடுவதற்கு 9 தமிழ்க் கட்சிகள் இணக்கம் தெரிவித்துள்ளன என்று





அதன்பேச்சாளர்சுரேஸ்பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பிரதிநிதிகளுக்கும் சக தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் ☞2

# பேருந்திலிருந்து 123 தோட்டா மீட்பு

பேருந்தின் பயணப் பொதிகள் வைக்கும் மேற்பகுதியில் வைக்கப்பட்டிருந்த பயணப்பை ஒன்றிலிருந்து 123 தோட்டக்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

பயணப்பையில்சிறியஇரும்புபெட்டியொன்றினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், இந்த தோட்டக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொழும்பிலிருந்து பதுளை நோக்கி பயணித்த பேருந்துஒன்றுசனிக்கிழமைபிற்பகல்பண்டாரவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பண்டாரவளை பேருந்து நிலையத்திற்கு அருகில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

பண்டாரவளை பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த சோதனை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது 123 செயற்படக்கூடிய தோட்டக்கள் கண்டுபிடிக்கப்பட்ட போதும், சந்தேகத்திற்குரிய எவரும் ☞8

# எம்.பிக்களுக்குப் பாதுகாப்புக்கு வழங்குவது பற்றி முடிவில்லை

### பாதுகாப்பு அமைச்சர் தெளிவுபடுத்தல்

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பிற்காகபொலிஸ்அதிகாரிகளை வழங்குவது குறித்து ஆளும்தரப்பு இன்னும்எந்த முடிவும்எடுக்கவில்லை என்றுபொதுமக்கள்பாதுகாப்புஅமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பாக ஆளும்தரப்பு பின்பற்றும் கொள்கையில் எந்த மாற்றமும் இல்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்க கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தன, மேலும் இந்த விவகாரம் குறித்து ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு பதில் ☞8

### சாவுத் தண்டனையை பொலிஸார் தீர்மானித்தால்

# நாளை எவர் உயிருக்கும் உத்தரவாதம் கிடையாது

### மக்கள் போராட்டக் குழு செயற்பாட்டாளர் எச்சரிக்கை

யாருக்கு சாவுத் தண்டனை வழங்கவேண்டும் என்ற முடிவை பொலிஸார் எடுப்பதாகயிருந்தால் நாளை நாட்டில் எவரின் ☞2

# விசேட தேவையுடைய பிள்ளைகளின் உயர் கல்வியின் மீது விசேட கவனம்

### பிரதமர் ஹரினி உறுதியளிப்பு

மாற்றுத்திறனாளி சமூகத்தின் கல்வியை மேம்படுத்துவதற்காக கல்வி அமைச்சின் கண்காணிப்பின் கீழ் விசேட தேவையுடைய பிள்ளைகளின் உயர்கல்வி தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பிரதமருக்கும் மாற்றுத்திறனாளி சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனங்களுடன் தொடர்புடைய குழுவினருக்கும் இடையிலான சந்திப்பு நாடாளுமன்ற வளாகத்தில் ☞8

### கணேமுல்ல சஞ்சீவ கொலை:

# மேலும் 3 பேர் கைது

கணேமுல்லசஞ்சீவகொலைசம்பவம்தொடர்பாக கைது செய்யப்பட்ட மேலும் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களைப் பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்க கொழும்பு குற்றவியல் பிரிவு பொலிஸாருக்கு கொ--ழும்பு நீதிவான் நேற்று அனுமதி வங்கினார்.

கொழும்பு குற்றப்பிரிவினால் கைது செய்யப்பட்ட இந்த மூன்று சந்தேகநபர்களும் நேற்று பிற்பகல் கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெக்குனாவலவிடம் முற்படுத்தப்பட்டனர்.

கொலையாளியை அழைத்துச் சென்ற சந்தேகநபர்கள் இருவரும், துப்பாக்கியை வழங்கிய மற்றுமொரு சந்தேகநபருமே கைது ☞8

# 5 படகுகளுடன் 32 இந்தியர்கள் இலங்கைக் கடற்பரப்பில் கைது

கடற்படையினர் நாட்டின் வடக்கே மன்னார் கடற்பரப்பில் சனிக்கிழமை, மற்றும் நேற்று அதிகாலை மேற்கொண்ட சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, இந்நாட்டு கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட ஐந்து இந்திய மீன்பிடி படகுகளுடன் முப்பத்திரண்டு இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாட்டின் கடற்பரப்பை மீறி வெளிநாட்டு மீன்பிடி கப்பல்கள் மேற்கொள்ளும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை தடுக்கவும், இந்நாட்டு மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும் கடற்படை வழக்கமான நடவடிக்கைகளை ☞8

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

நேற்று செய்திகள் வெளியாகின. ஆனால், அதற்குள்ளும் குழப்பங்கள் இருப்பதாகத் தெரிகின்றது.

இந்த 8 கட்சிகளுக்குள் ஏற்கனவே 5 கட்சிக் கூட்டணியான ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் அடக்கம். அதற்கு மேலாக விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி, சட்டத்தரணியும் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு முன்னாள் உறுப்பினர் தவராசாவின் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் முன்னாள் ஈபிடிபி மத்திய குழு உறுப்பினருமான சந்திரகுமாரின் சமத்துவக் கட்சியும் முன்னாள் வடமாகாண விவசா அமைச்சர் ஐங்கரநேசனின் தமிழ்த் தேசிய பசுமை இயக்கமும் இப்போது இணைந்துள்ளன. இந்தக் கூட்டில் அனந்தி சசிதரனின் கட்சியையும் இணைத்துக்கொள்ள முயற்சிகள் முன்னெடுக்கப்படட்டாலும் ஜெனிவா செல்கிற காரணத்தைக் காட்டி அவர் பங்கேற்கவில்லை. நாடாளுமன்றத் தேர்தலின்போதும் இந்தக் கூட்டுக்குள் வராமல் அனந்தி சசிதரன் நழுவியிருந்தார்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னரும் இந்தத் தரப்பினர் அனைவரும் ஒரே அணியாகப் போட்டியிடுவது குறித்துப் பல கலந்துரையாடல்களை நடத்தியிருந்தனர். ஆனால், கடைசியில் இந்தக் கூட்டுக்குள் உள்ளவர்களே நான்கு தரப்பினராகப் பிரிந்துதான் போட்டியிட்டார்கள். அதன் விளைவாக யாழ்ப்பாணத்தில் இந்தக் கூட்டுக்கு ஒரு இடம்கூடக் கிடைக்கவில்லை. சுயேச்சையாகப் போட்டியிட்ட மருத்துவர் அருச்சுனாவிற்குக்கூட ஒரு ஆசனம் கிடைத்தபோதும் இந்தக் கூட்டிலிருந்த எவருக்கும் ஒரு இடம்கூடக் கிடைக்காத படிப்பினை காரணமாக உள்ளூராட்சி சபைத் தேர்தலிலாவது கூட்டுச் சேர்ந்து ஆசனங்களைப் பெறமுடியுமா என்கிற நப்பாசை காரணமாக இப்போது இணங்கி வந்திருக்கிறார்கள்.

இந்த 9 கட்சிக் கூட்டு மிகப் பெரிய அணியாகத் தோற்றம் பெற்றாலும் அதற்குள் இன்னும் குழப்பங்கள் நிலவுவதாகவே தெரிகின்றது. சங்குச்சின்னத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தாம் இணங்கி வரவில்லை என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் கூறுகின்றது. சங்குச் சின்னத்தில் போட்டியிடமாட்டோம் என்றுதான் நாடாளுமன்றத் தேர்தலிலேயே தனித்துச் சுயேச்சையாகப் போட்டியிட்டோம் என்றும் அந்தத் தரப்பு சுட்டிக்காட்டுகின்றது. ஆனால், சங்குச் சின்னத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்குத்தான் நேற்றைய கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது என்று சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறுகின்றார்.

அதேபோன்று, உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்வது குறித்து தமிழ் அரசுக் கட்சித் தலைவருடன் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பிரதான கட்சிகளான புளொட், ஈபிஆர்எல்எவ் ஆகியன பேச்சு நடத்தி வருகின்றபோதே இந்தக் கூட்டணியில் சங்குச் சின்னத்தில் தாம் போட்டியிடப்போவதாகவும் அறிவித்துள்ளனர். அதுமட்டுமன்றி நேற்றைய கூட்டத்தில் சிலர் இந்த 9 கட்சிக் கூட்டைவைத்து தமிழ் அரசுக் கட்சியைச் தோற்கடிக்கவேண்டும் என்றும் தேர்தலுக்குப் பின்னரும் அந்தக் கட்சியுடன் சேர்ந்து ஆட்சியமைக்கக்கூடாது என்றும் எல்லாச் சபைகளையும் இந்தக் கூட்டணியே கைப்பற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் உணர்ச்சிவசப்பட்டுக் கருத்துக்கள் தெரிவித்துள்ளார்கள்.

தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆகியவற்றின் முடிவெடுக்கக்கூடிய அதிகாரம்கொண்ட தலைவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. அவர்களின் பிரதிநிதிகள் அலைபேசிகளில் அவர்களுக்கு அவ்வப்போது கூட்டத்தில் ஆராயப்படும் விடயங்கள் தொடர்பில் தகவல் தந்து, அவர்களின் நெறிப்படுத்தலின்படியே தமது கருத்துக்களைத் தெரிவித்தார்கள். எனவே இறுதியில் தலைவர்கள் இந்தக் கூட்டுக் குறித்து என்ன முடிவை எடுப்பார்கள் என்பதை உறுதியாகத் தெரிவிக்க முடியாது.

கூட்டத்தின் நடுவில் கிளிநொச்சியில் சந்திரகுமார் மற்றும் சிறீதரன் விவகாரங்களும் பேச்சுக்கு வந்துள்ளன. தமிழ் அரசுக் கட்சியுடனும் பேசி வருகிறீர்கள், சந்திரகுமாரையும் இந்தக் கூட்டில் வைத்துள்ளீர்கள். இது எப்படிச் சாத்தியமாகும்? சந்திரகுமார் இருக்கும் கூட்டிற்குள் வருவதற்கு சிறீதரன் எதிர்ப்புத் தெரிவிப்பாரே. ஒருவேளை அவரையும் மீறி தமிழ் அரசுக் கட்சி கூட்டுக்கு இணங்கினால்கூட சிறீதரன் கட்சியிலிருந்து வெளியேறிவிடுவாரே என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. அதற்கு, அப்படி சிறீதரன் வெளியேறினால் தமிழ் அரசுக் கட்சியுடன் தான் கூட்டுச் சேர்வார் என்று சந்திரகுமார் பதிலளித்துள்ளார். தமிழ் அரசைவிட்டு சிறீதரன் வெளியேறினால் அவர் இந்தப் புதிய கூட்டுக்கு வரக்கூடும் என்றும் அங்கு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இப்படிப் பலதும் பத்துமாக, நிச்சயமற்ற ஓர் அடித்தளத்தில் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு போலவே இந்த 9 கட்சிக் கூட்டு இப்போதைக்கு ஒன்று சேர்ந்துள்ளது. தேர்தல் வரையும் தொடர்ந்து செல்லுமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சங்குச்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் பங்குகொள்வது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முற்பகல் யாழ்ப்பாணம் இணுவிலில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈபிஆர்எல்எவ் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் ஸ்ரீகாந்தா, ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் ரவீந்திரா (வேந்தன்), தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் மணிவண்ணன், ரெலோ சார்பில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சபா குகதாஸ், ஜனநாயக தமிழ் அரசுக் கட்சி சார்பில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் நாவலன், சமத்துவக் கட்சித் தலைவர் சந்திரகுமார், தமிழ்த் தேசிய பசுமை இயக்க பிரதிநிதிகள் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இக்கூட்டம் சம்பந்தமான ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்ததாவது:

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் சக தமிழ்க் கட்சிகள் உள்ளிட்ட அனைத்து அமைப்புக்களும் இணைந்து ஒரே அணியாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முகம் கொடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி என்னும் கட்சியின் பெயரில் இணைந்து போட்டியிடுவது என்றும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் சின்னத்தை பொதுவான சின்னமாக அனைவரும் ஏற்றுக்கொண்டு அச்சின்னத்தில் போட்டியிடுவது என்றும் இணக்கம் எற்பட்டுள்ளது. மாவட்ட ரீதியாக யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் மாவட்டத் தேர்வுக்குழுவை உருவாக்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார்.

## நாளை....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிருக்கும் உத்தரவாதமற்ற நிலைதான் உருவாகும் என மக்கள் போராட்ட முன்னணியின் செயற்பாட்டாளர் ராஜ்குமார் ரஜீவ்காந் தெரிவித்துள்ளார்

கொழுமப்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பில் இடம்பெற்ற இரட்டை கொலை தொடர்பான சில விடயங்களை நாங்கள் பேசவேண்டியுள்ளது. இந்த நாட்டில் முன்னரும் பொலிஸார் குற்றவாளிகள் என சந்தேகிக்கப்படுகின்றவர்கள் அல்லது உண்மையாக குற்றவாளிகள் என அடையாளம் காணப்பட்ட நபர்களை தங்களின் விருப்பத்திற்கு ஏற்ப பொலிஸார் கொண்டு சென்று கொலைசெய்துள்ளார்.

இப்படிப் பலதடவைகளில் பலதடவைகளில் இப்படியான விடயங்கள் இடம்பெற்றுள்ளன. இதனை நாங்கள் கூறவில்லை ஏற்கனவே அனுரகுமாரதிசநாயக்கவே நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார். ''ஒருவர் ஆயுதம் இருக்கென்று கூறுவார். அவரை அழைத்துச் செல்வார்கள், அவர் அந்த ஆயுதத்தை எடுத்துப் பொலிஸாரைச் சுடுவதற்காக முயற்சி செய்வார். பின்னர் பொலிஸார் தங்களைக் காப்பாற்றிக்கொள்வதற்காக சுட்டார்கள் என்று ஒரு கதையை கூறுவார்கள்'' எனத் தெரிவித்திருந்தார்.

இந்தக் கதை பல தடவைகள், பல சந்தர்ப்பங்களில் தெரிவிக்கப்பட்ட ஒன்று, இது பொய்யான கதை என்பது அனைவருமே அறிந்தது, கொழும்பில் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற துப்பாக்கிசூட்டுச் சம்பவத்தின் பின்னர் கைதுசெய்யப்பட்ட இருவரும் எப்படி ஆயுதம் இருக்கின்ற இடத்திற்கு அவசரமாக அழைத்து செல்லப்பட்டார்கள்? அழைத்து சென்றார்கள் என்பது தொடர்பில் முழுமையான விளக்கமில்லை.

2023ஆம் ஆண்டு தொடுக்கப்பட்ட வழக்கிலே குற்றவாளிகள் யாரையாவது எந்த இடத்திற்காக கொண்டு செல்லவேண்டும் என்றால் அதனை வீடியோ வடிவிலே பொலிஸார் பதிவு செய்யவேண்டும் எனத் தெளிவாக கூறப்பட்டுள்ளது. இந்த வீடியோ ஆதாரம் இருக்கவேண்டும், எங்கே கூட்டிச்சென்றார்கள் என்ன நடந்தது என்று பதிவு செய்யப்பட்டிருக்கவேண்டும். எனினும் இந்தச் சந்தர்ப்பத்தில் இது எதுவுமே செயற்படுத்தப்படவில்லை இவர்கள் குற்றவாளிகள் தான? இல்லையா? எதற்காகக் கொலை செய்தார்கள்? யாரின் தூண்டுதலின் பேரில் கொலை செய்தார்கள்? இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் விடை தெரியவராமலேயே இருவரும் உயிரிழந்துவிட்டனர்

யாருக்கு சாவுத் தண்டனை கொடுக்கவேண்டும் என்ற முடிவைப் பொலிஸார் எடுப்பதாகயிருந்தால், நாளை எங்களில் எவரின் உயிருக்கும் உத்தரவாதம் இல்லாத நிலை உருவாகும் என்பதை நாங்கள் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

குற்றம்சாட்டப்பட்ட ஒருவருக்கு நீதிமன்றம் செல்லவும் குற்றவாளியென்றால், அவருக்கு தண்டனையைப் பெற்றுக்கொடுப்பதற்குமான அனைத்துச் சட்டதிட்டங்களும் இலங்கையில் இருக்கின்றது.

இவ்வளவு அவசர அவசரமாக பொலிஸார் இவர்களைக் கொலைசெய்வதற்கான காரணம் என்ற கேள்வியை ஆளும்தரப்பை நோக்கி நாங்கள் எழுப்புகின்றோம்.

இன்று நேற்றல்ல தொடர்ச்சியாக பல சந்தர்ப்பங்களிலே இந்த கொலைகள் இடம்பெற்றுள்ளன. எங்களை போன்ற செயற்பாட்டாளர்கள் பல தடவை கைதுசெய்யப்பட்டிருக்கின்றோம், எந்தவித பெரும் வன்முறையிலும் ஈடுபடாத எங்களையே கைவிலங்குகளை போட்டுத்தான் அழைத்துச்செல்வார்கள். ஆனால் கொலைகளை செய்த இரண்டுபேரை எந்த கைவிலங்கும் இல்லாமலா அழைத்து சென்றார்கள் என்ற கேள்வி எங்களிற்குள்ளது. அதுமட்டுமல்லாது தொடர்ச்சியாக எத்தனை காலம்தான் ஆயுதத்தை காட்ட எடுத்துச்சென்றார்கள், ஆயுதத்தை எடுத்து தங்களை சுட முயன்றார்கள், அவர்களை நாங்கள் கொலை செய்தோம் எனத் தெரிவிப்பார்கள்.

அவர்களிற்குச் சரியான பாதுகாப்பை ஏற்படுத்தி கொள்ள முடியவில்லையா அல்லது இந்த ஒரு பொய் கதைதான் அவர்களிடம் இருக்கின்றாதா என்ற கேள்வியெல்லாம் எங்களிடம் உள்ளது. உண்மையிலேயே இந்த நாட்டில் உள்ள குடிமக்களின் பாதுகாப்பு தொடர்பில் அதிக அக்கறை காண்பிக்கவேண்டிய காலமாக உள்ளது,

சுமார் இரண்டுநாட்களில் ஆறுகொலைகள் இடம்பெற்றுள்ளன, ஜனவரியிலிருந்து இன்றுவரை 17 துப்பாக்கி சூட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன,. இன்று நேற்றல்ல இலங்கையில் பலகாலமாக பாதாளஉலகம் போதைப்பொருள் கடத்தல்காரர்கள்; என இந்தசூட்டுசம்பவம் இடம்பெறுவதை நாங்கள் அவதானித்துக்கொண்டிருக்கின்றோம்.

ஆனால் இவற்றை பயன்படுத்தி அரசியல் கொலைகளும் படிப்படியாக இடம்பெறலாம் கொலைகள்மலிந்துபோகின்றநாடாகஇலங்கை மாறிக்கொண்டிருக்கின்றது.

இந்த கொலைகளை உடனடியாக தடுத்து நிறுத்தவேண்டும், அதற்கான சரியான

தொடர்ச்சி 8 ம் பக்கம்.....

# தலைவர், செயலரை கட்சியை விட்டு வெளியேற்றவே ஒற்றுமை நாடகம்

## கஜேந்திரகுமார் மீது தமிழ் அரசின் கொழும்புத் தலைவர் பாய்ச்சல்

தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சிவ ஞானத்தையும் செயலாளர் சுமந்திரனையும் கட்சியைவிட்டு வெளியேற்றவே ஒற்றுமை என்றநாடகமாடுகிறார் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் என்று தெரிவித்திருக்கிறார் கட்சியின் கொழும்பு மாவட்டக் கிளைத் தலைவர் இரத்தினவடிவேல்.

இது தொடர்பில் அவர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழ கடந்த 16ஆம் திகதி களுவாஞ்சிக்குடியில் கூடியபோது தமிழர் நலன் சார்ந்ததும் கட்சி நலன் சார்ந்ததுமான பல முக்கிய முடிவுகளை மேற்கொண்டிருந்தது. அவையாவும் ஊடகங்கள் வாயிலாக அன்றைய தினமே மக்களுக்கு அறிவிக்கப்பட்டுமிருந்தன.

22.-02.-25 அன்று காங்கிரஸ் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் கூட்டியிருந்த ஊடகச சந்திப்பின்போது தமிழ் அரசுக் கட்சி களுவாஞ்சிக்குடிக் கூட்டத்தில் மேற்கொண்டிருந்த முக்கிய தீர்மானமொன்று தொடர்பில் தப்பும் தவறுமான விடயங்களைத் தெரிவித்திருந்ததன் காரணமாக இந்தத் தெளிவுபடுத்தல் அவசிமாகின்றது.

அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டவன் என்ற அடிப்படையிலும் கட்சியின் கொழும்புக்கிளைத் தலைவர் என்ற அடிப்படையிலும் இந்தத் தெளிவுபடுத்தலைப் பகிரங்கப்படுத்தவேண்டிது அவசியமாகிறது.

தமிழ அரசுக் கட்சி சமஸ்டிக் கொள்கையின் அடிப்படையில் கடந்த 75 ஆண்டுகளாக செயற்பட்டு அந்தக் கொள்கை நிலைப்பாட்டில் தொடர்ந்தும் பயணிக்கின்றது. இதில் எந்த விட்டுக்கொடுப்புக்களுக்கும் இடமில்லை. தந்தை செல்வாவுடனும், அண்ணர் அமிர்தலிங்கத்துடனும் அவர்களது சாத்வீகச் செயற்பாட்டிலும் பின்னர் விடுதலைப் புலிகளின் அரசியற் கோட்பாட்டுடனும் இணைந்து பயணித்த அரசியற் தெளிவுள்ள பலர் இன்னமும் கட்சியுடன் இணைந்து செயற்படுகிறார்கள் என்பதை இங்கே குறிப்பிடுவது பொருத்தமானது.

எனவே தமிழ் மக்களுக்கு உகந்த அந்தத் தீர்வுகளை எட்டுவது தொடர்பில் கட்சி மிகவும் நிதானமாகவும் தீர்க்க தரிசனத்துடனும் செயற்படுகின்றது. புதிதாக கஜேந்திரகுமார் பாடம் எதுவும் எடுக்கவேண்டிய நிலையில் கட்சி இல்லை என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். தற்போதைய நிலையில் அரசியற் சீர்திருத்தம் தொடர்பில் முன்னெடுப்புக்களை மேற்கொள்வதற்காக 7 உறுப்பினர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினமே அதன் முதற்கூட்டமும் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலும் மத்திய செயற்குழுவிலும் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் தலைவர் சிவஞானம் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமாருக்கு பதிற்கடிதம் ஒன்றினை விவரமாக எழுதியுள்ளார். அதில் எந்தவித முரண்பாடுகளுக்கும் இடம் இல்லை.

சுமந்திரன் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து சிவஞானம் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு முன்பின் முரணான பதிலைத் தமக்கு அனுப்பியுள்ளார் என்று கஜேந்திரகுமார் தெரிவித்திருப்பது மிகவும் அபத்தமானது.

2016 முதல் -2019 வரை மேற்கொள்ளப்பட்டிருந்த அரசியல் வரைவு, அதற்கு முன்பும் பின்புமாக வெவ்வேறு ஆளும்தரப்புக்களுக்கு கட்சியால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் யாவற்றையும் கருத்திற்கொண்டு அவற்றில் உள்ள ஏற்புடைய விடயங்களையும் இன்னும் மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்களையும் உள்ளடக்கியதான யோசனைகளை புதிய அரசுக்குச் சமர்ப்பிக்கும் பணி அந்த 7 உறுப்பினர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வேறு ஏதேனும் ஆலோசனைகளை வேறு தரப்பினர் முன்வைத்தால் அவற்றையும் உள்ளடக்கி முன்கொண்டு செல்வதில் கட்சிக்கு எந்தவிதமான பிரச்சனைகளும் இல்லை. ஆனால் தாம் முன்னெடுக்கும் யோசனைகளுக்கு ஏனைய தரப்பினர் வரவேண்டும் என்கிற கஜேந்திரகுமாரின் கடும் நிலைப்பாட்டின் பின் போகவேண்டிய வங்குரோத்து நிலை தமிழ் அசுக் கட்சிக்கு ஏற்புடையதொன்றல்ல.

தவிரவும் ஒற்றுமை என்ற கோசத்தின் பின் ஒளிந்துகொண்டு தமிழ் அரசுக் கட்சியைப் பிளவுபடுத்தவும் கட்சித் தலைவர்களை, குறிப்பாக, கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரனையும், தலைவர் சிவஞானத்தையும் குறிவைத்துத் தாக்குவதற்கும் மேற்கொள்ளப்படும் நாடகம் அரங்கேற்றப்படுவதற்கு கட்சி ஒருபோதும் இடமளிக்காது என்பதனை கஜேந்திரகுமார் புரிந்துகொள்ள வேண்டும்.

அவரது பிந்திய பேட்டியில் இந்த நாடகம்தான் கனகச்சிதமாக அரங்கேற்றப்பட்டுள்ளது என்பதனைப் புரிந்துகொள்வதற்கு எவருக்கும் விசேடமான அரசியல் அறிவு வேண்டியதில்லை - என்றுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# தரம் 6இல் தமது பிள்ளைகளைச் சேர்க்க சிரமத்தை எதிர்நோக்கும் பெற்றோர்கள்




ஹற்றன் கப்ரியல் மகளிர் கல்லூரியின் தமிழ்ப் பிரிவுக்கு தமது பிள்ளைகளை தரம் 6 இற்கு உள்வாங்குவதில் கல்லூரி நிர்வாகம் அசமந்தமாக செயற்படுவதாக பெற்றோர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் வலயக்கல்வி பணிமனையின் உத்தரவுகளையும்மேற்படி கல்லூரிநிர்வாகம்அசட்டை செய்வதாகவும் காரணமின்றி தமது பிள்ளைகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றன எனவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

தரம் 6 இற்கு தமது பிள்ளைகளை சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்ட போதிலும் பிள்ளைகளை நேர்காணலுக்கு அழைக்காமல் எந்த காரணங்களும் கூறப்படாமல் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு பெற்றோருக்கு அனுப்பப்பட்டுள்ளன.


கல்லூரி அதிபரின் கையொப்பம் இல்லாது இலட்சினை மாத்திரம் இடப்பட்டு தமக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக பெற்றோர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதையடுத்து பல பெற்றோர்கள் ஹற்றன் வலயக்கல்விபணிமனைக்குச்சென்றுபணிப்பாளரிடம் இது குறித்து முறைப்பாடு செய்ததையடுத்து அவர் அதிபரிடம் இது குறித்து விளக்கமளித்து சுற்றுநிருபங்கள் மற்றும் மாணவர் சேர்க்கை விதிகளின் படி மாணவிகளை உள்வாங்கும்படி அறிவுறுத்தியுள்ளார்.

மேலும் நிராகரிக்கப்படுவதாக கடிதங்கள் அனுப்புவதுமுறையல்லஎன்றும்பாடசாலைஅதிபரின் கையொப்பங்கள் இல்லாது அனுப்பியதையும் ஏற்றுக்கொள்ள முடியாது என உதவிக் கல்வி பணிப்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனினும் வெள்ளிக்கிழமையன்று மீண்டும் பாடசாலைக்குச் சென்ற பெற்றோர்கள் மற்றும் மாணவிகளை ஒரு மணித்தியாலயத்துக்கு மேல் காக்கவைத்துள்ள கல்லூரி நிர்வாகம், பெற்றோரை அழைத்து, உங்களுக்கு கடிதம் அனுப்புகிறோம் எனக் கூறி திருப்பியனுப்பியுள்ளது.

ஹற்றன் கப்ரியல் கல்லூரியின் தரம் ஒன்று தமிழ்ப்பிரிவுக்கும் தரம் ஆறுக்கும் மாணவிகளை உள்வாங்குவதில் பாரபட்சம் காட்டப்படுவது குறித்து பல வருடங்களாக சுட்டிக்காட்டப்பட்டும் அது குறித்து கல்வி அதிகாரிகளோ அல்லது அரசியல் பிரமுகர்களோ அக்கறை கொள்வது கிடையாது என விசனம் தெரிவிக்கின்றனர்.



## வவுனியாவில் ஓட்டோ மீது முறிந்துவீழ்ந்த மரம்: மயிரிழையில் உயிர் தப்பிய முதிய பெண்மணி

வவுனியா - குருமன்காடு பகுதியில் ஓட்டோ ஒன்றின்மீது மரம் முறிந்து விழுந்ததில் ஓட்டோ முழுமையாக சேதமடைந்துள்ளதுடன், பெண் ஒருவர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

சனிக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

வவுனியா, மன்னார் வீதி, குருமன்காடு சந்திப் பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றின் முன்னால் ஓட்டோ ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், அதில் முதிய பெண்மணி ஒருவரும் இருந்துள்ளார். இதன்போது தனியார் மருத்துவமனை முன்பாக வீதியில் நின்ற மரம் ஒன்று திடீரென முறிந்து விழுந்துள்ளது.

மரம் முறிந்து விழுவதை அவதானித்த முதிய பெண்மணி, ஓட்டோவில் இருந்து இறங்கி ஓடியதால் பாதிப்புக்கள் இன்றி தப்பியுள்ளார். ஓட்டோமீது மரம் விழுந்ததால் ஓட்டோ முழுமையாக சேதமடைந்துள்ளது. பின்னர் மரத்தின் கொப்புகளை வெட்டி ஓட்டோவைமீட்ட போதும் அது முழுரமையாக சேதமடைந்துள்ளது.

100





## சாரணர் இயக்க ஸ்தாபகர் நினைவாக வுனியாவிலுள்ள தொடருந்து நிலையத்தை அழகுபடுத்திய சாரணர்கள்

சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகர் ரொபேர்ட் பேடன் பவல் பிரபுவின் 168 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு இலங்கை சாரண சங்கத்தின் வவுனியா மாவட்ட கிளையின் சாரணர்கள் வவுனியாவிலுள்ள ரயில் நிலையங்களை அழகுபடுத்தும் செயற்பாட்டை முன்னெடுத்திருந்தனர்.

சாரணர் சங்கத்தின் மாவட்ட ஆணையாளர்யோ.கஜேந்திரன்தலைமையில் சனிக்கிழமை இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதன்படி வவுனியா ரயில் நிலையம், தாண்டிக்குளம்ரயில்நிலையம், ஓமந்தை ரயில் நிலையம், புளியங்குளம் ரயில் நிலையம், செட்டிக்குளம் ரயில் நிலையம் ஆகிய ரயில் நிலையங்களை ஒரே நாளில், ஒரே நேரத்தில் அழகுபடுத்தும் செயற்பாடுகளில் வவுனியா சாரணர்கள் ஈடுபட்டனர்.

இத்திட்டம் தேசிய சாரணர் தலைமையகத்தின் கருத்தாக்கம் மற்றும் க்ளீன் சிறிலங்கா திட்டத்துடன் இணைந்து செயற்படும் தேசிய வேலைத்திட்டமாகும்.

இதன் பிரதான நிகழ்வு வவுனியா பிரதான ரயில் நிலையத்தில் இடம்பெற்றது. ரயில் நிலையத்தை சூழவுள்ள பகுதிகளிலுள்ள பிளாஸ்டிக், பொலித்தீன், ஏணைய கழிவுகளை அகற்றி ரயில் நிலையத்தை தூய்மையான இடமாக மாற்றியமைத்தனர்.

இந்நிகழ்வில், வவுனியா ரயில் திணைக்கள அதிபர் சி.அகிலேஸ்வரன், இலங்கை சாரணர் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தின் உதவி ஆணையாளர் எஸ்.மயூரன், மாவட்ட சாரணங்கத்தின் நிர்வாக உறுப்பினர்கள், உதவி மாவட்ட ஆணையாளர்கள், திரி சாரணர்கள், சமாதானத்திற்கான தூதுவர் குழுவினர், பொறுப்பாசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

100











காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அவசர அவதானம் தேவை

இலங்கை மின்சார சபை (CEB) கடந்த வாரம் முதல் சூரியமின் உற்பத்திக்குக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது, சிறிய அளவிலான சூரிய மின் உற்பத்தியாளர்கள் காலை 11 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை தமது உற்பத்தியை தேசிய மின் மார்க்கத்தில் இணைப்பதைக் கட்டுப்படுத்துமாறு அது அறிவுறுத்தியது. அதாவது 10 மெகா வோற் அளவுக்கு மேல் உற்பத்தி செய்யும் தரையில் அமைக்கப்பட்ட மின் உற்பத்தி நிலையங்கள் தமது உற்பத்தியைக் குறைக்கவேண்டும்.

பெப்ரவரி 16, 2025 அன்று காலை முதல் இந்தக் கட்டுப்பாடு திடீரென நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மின் குறைப்பு அமல்படுத்தப்பட்ட நாளில் – உற்பத்தியாளர்களுக்கு வாய்மொழியாக மட்டுமே அறிவிக்கப்பட்டதால், இந்தக் குறைப்பு தொடருமா என்பது நிச்சயமற்றதாகவே உள்ளது.

தேசிய மின் மார்க்கத்தில் (கிரிட்) இணைக்கப்பட்ட சூரிய மின் சங்கத்தின் தலைவர் சமீர கணேகோடாவின் கூற்றுப்படி, பாதிக்கப்பட்ட அனைத்து மின் நிலையங்களும் 10 மெகாவாட்டிற்கும் அதிகமான திறன் கொண்டவை. மின்சார சபைக்கும் இந்த உற்பத்தியாளர்களுக்கும் இடையே கையெழுத்திடப்பட்ட மின் கொள்முதல் ஒப்பந்தங்களில் (PPAக்கள்) அத்தகைய குறைப்பை அனுமதிக்கும் விதிகள் இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

இதற்கிடையில், ஒழுங்குமுறைஅமைப்பிற்குமுன்னறிவிப்பு இல்லாமல் மேற்கொள்ளப்பட்ட இந்த மின் வெட்டுக்கள் குறித்து இலங்கை பொது பயன்பாட்டு ஆணையம் (PUCSL) மின்சார சபையிடமிருந்து அதிகாரப்பூர்வ அறிக்கையைக் கோரியுள்ளது. கிரிட்டுக்குசூரியமின்சாரத்தைவிநியோகிப்பது தொடர்பான சபையின் எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் ஆணையம் விளக்கம் கோரியுள்ளது.

இந்த முன்னேற்றங்கள் மாசி 9, 2025 அன்று இலங்கை மூவதும் மின் தடை ஏற்பட்டதைத் தொடர்ந்து வந்ததுள்ளன. பாணந்துறை தேசிய மின் மார்க்க துணை மின்நிலையத்தில் (GSS) ஏற்பட்ட ஒரு இடையூறு காரணமாக மின் தடை ஏற்பட்டதாக மின்சார சபை ஒரு செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது, இது தேசிய மின் மார்க்கத்தில் திடீர் மின்னழுத்த வீழ்ச்சிக்கு வழிவகுத்தது.

மின்சார சபையின் அறிக்கையின்படி சூரிய மின் உற்பத்திக்கும் ஏனைய மின் உற்பத்திக்கும் இடையே ஏற்பட்ட சமமின்மைதான் இந்தத் தடைக்குக் காரணம். தேவைக்கு அதிகமாக சூரிய மின் உற்பத்தி கிடைப்பதால் இதுபோன்ற பிரச்சினை ஏற்படுவதாக அது கூறுகின்றது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, மின் தேவை குறைவாக இருக்கும் காலங்களில், மின் கட்டமைப்பு உறுதியற்ற தன்மையை ஏற்படும் அபாயத்தைக் குறைக்க, தேவைப்படும்போது, தரையில் பொருத்தப்பட்ட சூரிய மின் உற்பத்தியைக் குறைக்கப்போவதாக சபை அறிவித்தது. கூரை சூரிய மின் உற்பத்தி இந்தக் கட்டுப்பாடு பொருந்தாது.

இருப்பினும், அறிவுறுத்தல்களின் திடீர் தன்மை குறித்து தொழில்துறை வட்டாரங்கள் கவலை தெரிவிக்கின்றன, இந்த நடவடிக்கை குறைந்த விலைக் கொள்கைக்கு முரணானது என்று அவை வாதிடுகின்றன. பாதிக்கப்பட்ட மின் உற்பத்தி நிலையங்களுக்கான தேர்வு அளவுகோல்கள் மற்றும் மின் கட்டுப்பாடுகளின் அளவைத் தீர்மானிக்கப் பயன்படுத்தப்படும் வழிமுறைகள் குறித்தும் அவை கேள்வி எழுப்புகின்றன.

புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி மார்க்கங்கள் மூலம் மின்சார உற்பத்தி அளவைப் பெருக்குவது என்கிற அரச கொள்கைக்கும் இது முரணாக இருக்கின்றது. பிரச்சினை என்று வருகின்றபோது, செலவு குறைந்த புதுப்பிக்கத்தக்க மார்கங்களில்கைவைப்பதென்பது செலவு கூடிய சூழலுக்குப் பாதிப்பான மின் உற்பத்தி மார்க்கங்களை ஊக்குவிப்பதாக அமைகின்றது. இது முற்றிலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. இது குறித்து ஆளும்தரப்பு அவதானம் செலுத்தவேண்டும். அவசரமாக.




## அமெரிக்கா நேட்டோவிலிருந்து வெளியேறுமா? ட்ரம்பின் வெளியுறவு கோட்பாட்டில் மாற்றம்

ஐங்கரன் விக்கினேஸ்வரா

அமெரிக்காவை நேட்டோவிலிருந்து வெளியேற்ற முடியுமா ? அல்லது அமெரிக்கா நேட்டோவிலிருந்து வெளியேறுகின்றதா என்ற கேள்விகள் ஐரோப்பிய இராஜதந்திர வட்டாரங்களில் எழுந்துள்ளன. அப்படி வெளியேற்றினாலோ அல்லது வெளியேறினாலோ என்ன நடக்கும் என்பதை அலசும் ஓர் ஆக்கமாகும்.

**ஐரோப்பாவுடன் முரண்படும் டிரம்ப்:**

ஐரோப்பிய நாடுகளுடன் முரண்படும் ஜனாதிபதி டிரம்ப் அமெரிக்காவை நேட்டோவிலிருந்து விலக்கிக் கொண்டால், உலகளாவிய அதிகார சமநிலை ஒரே இரவில் மாறும் நிலை ஏற்படும். ஐரோப்பா இதற்கு முன் எப்போதும் இல்லாத அளவுக்கு ஒரு பாரிய பாதுகாப்பு நெருக்கடியை எதிர்கொள்ளும்.

அதன் விளைவாக உலகின் வலுவான பாதுகாப்பு அமைப்பான நேட்டோ சரிந்துவிடும் அல்லது ஒரு காகிதப் புலியாக மாறும் என்றும் நம்பலாம். அத்துடன் அமெரிக்க நிதி மற்றும் இராணுவ சக்தி இல்லாமல், நேட்டோ அமைப்பில் தங்களுக்குள் தலைமைக்காக போராடும் நிலை ஏற்படும்.

அமெரிக்கா தற்போது நேட்டோவின் பாதுகாப்பு செலவினங்களில் எழுபது சதவீதத்தை செலுத்துகிறது. அது இல்லாமல், ஐரோப்பிய நாடுகள் இராணுவ வரவு செலவுத் திட்டங்களை வெகுவாக அதிகரிக்கவோ அல்லது இராணுவ வீழ்ச்சியை ஏற்கவோ கட்டாயப்படுத்தப்படும்.

மேலும் பல தசாப்தங்களாக அதன் சொந்த




இராணுவப் படையை விரைவாக உருவாக்க முடியாவிட்டால், ரஷ்யா போன்ற பெரிய சக்திகளுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் பாதுகாப்பற்றதாக இருக்கும் நிலையும் ஏற்பட வாய்ப்புள்ளது.

ஏதேனும் ஒரு ஐரோப்பிய நேட்டோ நாடு உக்ரைனுக்குள் துருப்புக்களை அனுப்பினால், அவர்களுக்கு அமெரிக்காவின் ஆதரவு இருக்காது. நேட்டோ அமைப்பில் இருந்து அமெரிக்க ஆதரவு விலகினால், பிரான்ஸ் அல்லது ஜெர்மனி ரஷ்யாவுடன் நேரடியான வெளிப்படையான மோதலுக்கு ஆளாகுமா என்பதையும் இலகுவாக கணிக்க முடியாது.

**அமெரிக்கா நேட்டோவிலிருந்து வெளியேறுமா ?**

ரஷ்யாவை சுற்றியுள்ள பால்டிக் போன்ற சிறிய நேட்டோ நாடுகள் முற்றிலும் பாதிக்கப்படக் கூடியதாக இருக்கும். அமெரிக்க இராணுவ ஆதரவு இல்லாமல், ரஷ்ய ஆக்கிரமிப்புக்கு எதிராக அவர்களுக்கு எந்த பாதுகாப்பு உத்தரவாதமும் இருக்காது.

மாஸ்கோ தனது பிராந்திய செல்வாக்கை வலுப்படுத்துவதுடன், நேட்டோ சரிவை



பச்சை விளக்காகக் காட்டி, ரஷ்யா ஒரு பெரிய மூலோபாய நன்மையைப் பெறும்.

முன்னைய கிழக்கு ஐரோப்பிய நாடுகளான போலந்து மற்றும் பால்டிக் போன்ற அமெரிக்க பாதுகாப்பை நம்பியிருந்த நாடுகள் திடீரென்று பாதுகாப்பு காரணங்களுக்காக தங்கள் நிலையை மாற்ற வேண்டிய கட்டாயத்திற்கும் தள்ளப்படும்.

அண்மைக் காலமாக ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை உக்ரைனுக்கு - டிரம்ப் வலியுறுத்தி வருவது நேட்டோவின் கொள்கை ரீதியான நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படுத்துவதை காட்டுகிறது.

**சுயாதீன பாதுகாப்புக் கொள்கை:**

இதன் காரணமாக ஐரோப்பாவிற்கு அதன் சொந்த இராணுவப் படை தேவை என்று பிரான்ஸ் மக்ரோன், பிரித்தானிய ஸ்டெமர் ஏற்கனவே கூறியுள்ளனர். ஆனால் உண்மை என்னவென்றால், ஐரோப்பிய ஒன்றியம் ஒரு சுயாதீனமான பாதுகாப்புக் கொள்கைக்கு (Self Secure Policy) இன்னும் தயாராக இல்லை என்பது உண்மைதான்.

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர்
Kalaikkathir

## அமெரிக்கா ...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

அதேவேளை நேட்டோ அமைப்பில் இருந்து அமெரிக்க ஆதரவு விலகினால், சில ஐரோப்பிய நாடுகள் சீனாவை நோக்கிச் செல்லலாம் அல்லது தங்கள் சொந்த பாதுகாப்பைப் பெற ரஷ்யாவுடன் புதிய இராஜதந்திர உத்திகளை புதுப்பிக்கவும் முயற்சிக்கலாம்.

புதிய கூட்டணிகளைத் தேடும் முயற்சிகள்தொடருமாயின்ஐரோப்பிய ஒன்றியம் பீதியடைவதுடன் பாரிய பின்னடைவை நோக்கி நகரும்.

இங்கிலாந்து பிரதமர் கெயார் ஸ்டார்மரின் உலகமயமாக்கல் நிகழ்ச்சி நிரலுடன் பிணைக்கப்பட்ட நேட்டோவின் பாதுகாப்பு தொடர்பான கோட்பாடானது டிரம்பை அந்நியப்படுத்துவதால் வாய்ப்புள்ளது என்று சில அரசியல் நிபுணர்கள் கருதுகின்றனர்.

அமெரிக்கா நேட்டோவிலிருந்து வெளியேறினால், அது உலகின் போலீஸ்காரர் என்ற அதன் பங்கின் முடிவைக் குறிக்கும். அமெரிக்கா வெளிநாட்டுப் போர்களில் அல்ல, அதன் சொந்த எல்லைகளைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்று டிரம்ப் ஏற்கனவே கூறியுள்ளார்.

ஆகையினால் அமெரிக்கா இல்லாத நேட்டோ நடைமுறையில் அர்த்தமற்றது. இதன் காரணமாக ரஷ்யா ஐரோப்பாவில் பெரும் செல்வாக்கைப் பெறும்.

அத்துடன் அமெரிக்க இராணுவ ஆதரவு இல்லாமல் ஐரோப்பிய ஒன்றியம் தன்னை நிலைநிறுத்திக்கொள்ளபோராடும்.



பொருளாதார , சமூக அரசியல் ரீதியாகவும் பின்னடைவை சந்திக்க நேரிடும்.

புதிய அதிபர் டொனால்டு டிரம்பின் செயற்பாட்டு ரீதியான கோட்பாடானது அமெரிக்காவின் உலகளாவிய இராணுவ ஆதிக்கத்தின் முடிவு என்று கருதப்படவும் பிரித்தானிய அரசின் ஸ்டார்மர் போன்ற ஐரோப்பிய தலைவர்கள் டிரம்பிற்கு எதிராக அழுத்தம் கொடுத்துக் கொண்டே இருந்தால், அமெரிக்கா அவர்களைப் பாதுகாப்பது முடிந்துவிட்டது என்ற ஒரு கருத்தை அவர்கள் உணரக்கூடும்.

உண்மையில் உலக மயமாக்கல்வாதிகள் நீண்ட காலமாக அமெரிக்க ஆதரவை சாதாரணமாக எடுத்துக் கொண்டுள்ளனர். அமெரிக்க அதிபர் டிரம்ப் நேட்டோவிலிருந்து விலகிச் சென்றால், விளைவுகள் மிகப்பெரியதாக இருக்கும்.



நேட்டோவில் டிரம்ப் அனைத்து உரிமைகளையும் வைத்திருக்கிறார். ஸ்டார்மரும் ஐரோப்பிய ஒன்றியமும் அமைதியை விரும்புகிறதா - அல்லது தங்கள் சொந்த பாதுகாப்பை வைத்து போராட விரும்புகிறதா என்பதை எதிர்காலமே முடிவு செய்ய வேண்டும்.

**புட்டின் - டிரம்ப் உறவு:**

அமெரிக்க அதிபர் டிரம்ப் அண்மையில் அளித்த பேட்டியில் புட்டின் விரும்பினால் உக்ரைன் முழுவதையும் வைத்திருக்க முடியும். விளாடிமிர் புட்டின் ஒரு ஒப்பந்தம் செய்ய விரும்புகிறார். ஆனால் அவருக்கு அது

தேவையில்லை, ஏனென்றால் அவர் விரும்பினால், அவர் உக்ரைன் முழுவதையும் வைத்திருக்க முடியும் என்று டொனால்ட் டிரம்ப் கூறியுள்ளார்.

நான் புட்டினை சிறப்பானவர் என்று சித்தரிக்க முயற்சிக்கவில்லை. நான் உங்களுக்கு உண்மையைச் சொல்கிறேன். இந்த மோதல் நடந்திருக்கக் கூடாது என்று டிரம்ப் வலியுறுத்தினார்.

ஆனால் ஜெலென்ஸ்கியிடம் ரஷ்யாவுடனான சமரசத்தை மீண்டும் ஏற்படுத்தும் பேச்சுவார்த்தைகளுக்கு எவ்வித துருப்புச் சீட்டுகளும் இல்லை என்றும் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

டிரம்ப் புட்டினுடனான தனது சமீபத்திய உரையாடலை மிகவும் நல்லது என்று கூறியதுடன், அதே நேரத்தில் கீவ் அரசுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தவில்லை என்றும் குறிப்பிட்டார். மேலும் ஐரோப்பிய நாடுகள் போரை நிறுத்த ரஷ்யாவுடன் தொடர்பு கொள்ள முயற்சிக்காதது உட்பட, உக்ரைனில் உள்ள மோதலை சமாளிக்க ஐரோப்பா எதுவும் செய்யவில்லை என்றும் அதிபர் டிரம்ப் கடுமையாக விமர்சித்துள்ளார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# சென். ஜோன் அம்பியுலன்ஸ் முதலுதவி சிகிச்சை குறித்து அடிப்படைக் கற்கைப், பயிற்சி நெறி சம்மாந்துறையில்

(தில்சாத் பர்வீஸ்)

அல் உஸ்வா இஸ்லாமிக் அமைப்பின் தலைவரும் அல் உஸ்வா மகளிர் அரபுக் கல்லூரியின் செயலாளர் ஐ.எல்.எம். முஸ்தபா மௌலவியின் தலைமையில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை கூட்ட மண்டபத்தில் புனித ஜோன் அம்பியுலன்ஸ் முதலுதவி சிகிச்சை குறித்த அடிப்படைக் கற்கை, பயிற்சி நெறிகள் சனிக்கிழமை நடைபெற்றன.

புனித ஜோன் அம்பியுலன்ஸ் முதலுதவி சிகிச்சை தொடர்பான அடிப்படைக் கற்கை, பயிற்சி நெறியினை புனித ஜோன் அம்பியுலன்ஸ் படைப் பிரிவின் அம்பாறை மாவட்ட ஆணையாளரும் தேசிய மாணவர் சிப்பாய்கள் படையணியின் 17 ஆவது படைப் பிரிவின் பயிற்சி அதிகாரி கெப்டன் எம்.டி. நௌஷாட் வபி தலைமையில் சுமார் 30 தொடக்கம் 40 வரையான தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு மூன்றாவது நாள் பயிற்சியில், முதலுதவி மூலம் பாதிக்கப்பட்ட ஒருவரை காப்பாற்றுவது பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது.

மேலும், எழும்பு முறிவு, தீ விபத்தின் போது, மின்சாரம் தாக்கிய போது, சி பி ஆர் முறை, வலிப்பு ஏற்படும் போது, மூச்சு தினறலின் போது, மாரடைப்பு ஏற்படும் போது, நீரில் தாண்ட போது, துப்பாக்கி சூடு ஏற்படும் போது, கத்திக் குத்து ஏற்படும் போது போன்ற பல சந்தர்ப்பங்களில் எவ்வாறு முதலுதவி மற்றும் சிகிச்சை வழங்குவது தொடர்பாக கற்கை நெறியுடன் கூடிய பயிற்சியும், அவசர சூழ்நிலைகளில் மேற்கொள்ள வேண்டிய முக்கிய நடவடிக்கைகள் பற்றிய பயிற்சிகளும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

இதன் போது, அல் உஸ்வா இஸ்லாமிக் அமைப்பின் தலைவரும் அல் உஸ்வா மகளிர் அரபுக் கல்லூரியின் செயலாளர் ஐ.எல்.எம். முஸ்தபா மௌலவி அவர்களால் தொடர்ச்சியாக மூன்று நாள்களாக காலை, மாலை சிற்றுண்டி மற்றும் பகல் உணவு போன்றவை வந்தவர்களுக்கு இப்பயிற்சியில் ஈடுபடும் அனைவரும் தமது கடவுளிடம் பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இந்நிகழ்விற்கு, புனித ஜோன் அம்பியுலன்ஸ் படைப்பிரிவின் சம்மாந்துறை, இறக்காமம் பிரதேச அத்தியட்சகர் ஏ.ஆர்.எம். ஹுசைனின், புனித ஜோன் அம்பியுலன்ஸ் படைப் பிரிவின் கல்முனை, நாவிதன்வெளி, சாய்ந்தமருது பிரதேச அத்தியட்சகர் எஸ்.ஏ.எம். அஸ்லம் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# வெடுக்குநாறிமலையில் சிவராத்திரியன்று பகலில் மட்டும் பூஜைகள் செய்ய ஏற்பாடு

## விவரங்களைப் பெற்ற நெடுங்கேணி பொலிஸார்

வவுனியா வடக்கு, வெடுக்குநாறி மலையில் சிவராத்திரி தினம் தொடர்பாக ஆலய பூசாரியார் மதிமுகராசா மற்றும் முக்கியஸ்தரான பூபாலசிங்கம் ஆகியோர் நெடுங்கேணி பொலிஸாரால் அழைக்கப்பட்டு விவரங்கள் பெறப்பட்டுள்ளன.

வவுனியா வடக்கு, வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் அதனை அண்டியுள்ள பகுதிகள் தொல்பொருட்திணைக்களத்திற்கு கீழ் உள்ளதாக தெரிவித்து, அந்த திணைக்களம் மற்றும் நெடுங்கேணி பொலிஸாரால் பொதுமக்கள் வழிபாடுகளை மேற்கோள்வதற்கு பல்வேறு தடைகள் ஏற்ப்படுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கடந்த வருடம் சிவாரத்திரி தினமன்று மாலை 6 மணிக்கு பின்னர் சிவராத்திரி பூஜைகளை செய்ய முற்பட்ட 8 பேர் நெடுங்கேணி பொலிஸாரால் அடாவடியான முறையில் கைது செய்யப்பட்டனர். இது தமிழ் மக்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியதுடன், பொலிஸாரின் செயற்பாடுகளுக்கு எதிராக பல்வேறு போராட்டங்களும் இடம்பெற்றிருந்தன.

இந்நிலையில் அது தொடர்பான வழக்கு வவுனியா நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, கைது செய்யப்பட்ட 8 பேரையும் வழக்கிலிருந்து முழுமையாக விடுதலை செய்த நீதிபதி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கினையும் தள்ளுபடி செய்தார்.

இந்நிலையில் இம்முறை சிவராத்திரி தினம் தொடர்பாக ஆலயத்தின் பூசாரியார் மற்றும் முக்கியஸ்தர் ஒருவர் நெடுங்கேணி பொலிஸாரால் அழைக்கப்பட்டு அவர்களிடம் விவரங்கள் பெறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆலயத்தின் பூசகர் மதிமுகராசாவிடம் கேட்டபோது, இம்முறை சிவராத்திரி விரத பூஜைகளை காலை முதல் மாலை 6 மணி வரை முன்னெடுப்பதற்கு நாம் தீர்மானித்துள்ளதாக தெரிவித்தார். 6 மணியின் பின்னர் பிறிதொரு பகுதியில் சிவனுக்கான இரவு அனுஸ்டானங்களை செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. சிவராத்திரி தினம் வெடுக்குநாறி மலையில் சிறப்பாக இடம்பெறும் என அவர் தெரிவித்தார். 100

# விவசாயிகள், மீனவர் அபிவிருத்தி தொடர்பில் வரவு – செலவுத் திட்டத்தின் பங்களிப்பு என்ன?

## கேள்வியெழுப்பிய அஷ்ரப் தாஹிர் எம்.பி

(அபு அலா, முபீன்)



கிழக்கு மாகாண கடற்தொழில் மற்றும் நெல் உற்பத்திகளை பிரதானமான தாக்க கொண்டு காணப்படுவது மட்டுமல்லாமல், இந்த நாட்டின் மொத்த நெல் உற்பத்தியில் அம்பாறை மாவட்டம் நான்கில் ஒரு பங்கு உற்பத்தியை தேசிய உற்பத்திக்காக வழங்குகின்ற பிரதேசமாக இருந்து வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் பற்றி மேலும் உரையாற்றுகையில் -

விவசாய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்ற சேனநாயக்க சமுத்திரத்தின் நீர்ப்பாசன முறைமையை விஸ்த்தரித்து பொத்துவில் பிரதேசங்களில் உள்ள சிறிய குளங்களை புனர்நிர்மாணம் செய்வதன் மூலம் இரண்டு போக வேளாண்மை செய்கையை நடைமுறைப்படுத்த இந்த வரவு செலவு திட்ட முன்மொழிவில் ஏதாவது முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளனவா? என்ற கேள்வியையும் அவர் எழுப்பினார்.

கடந்தவருடம்பலதடவைகள் குறித்தநீர்த்தேக்கத்தின் மேலதிக நீர் வெளியேற்றத்தின் காரணமாக விவசாயிகள் பாதிப்படைந்திருக்கிறார்கள். குறிப்பாக பாணமை தொடக்கம் புல்மோட்டை வரையான சுமார் 10 ஆயிரம் சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட கிழக்கு மாகாணம், தேசிய வருமானத்திற்கு பாரியளவிலான பங்களிப்பை வழங்கக் கூடிய பிரதேசமாக மாற்றியமைக்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கையினையும் முன்வைத்தார்.

குறிப்பாக மீனவர்களை மையப்படுத்திய திட்டங்களை அறிமுகப்படுத்தி இப்பிரதேசங்களில் காணப்படும் துறைமுகங்களை முறையான பயன்பாட்டிற்கு கொண்டுவருவதுடன் நன்நீர் மீன் வளர்ப்பு திட்டங்களுக்கான ஊக்குவிப்புக்களையும் மேற்கொள்வதற்கான ஒதுக்கீடுகள் இந்த வரவு செலவு திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளனவா? என்றும் அவர் கேட்டார்.

விவசாயபயிர்ச்செய்கைநிலங்கள்வனவிலங்கு, வன இலாகா, தொல்பொருள் மற்றும் பாதுகாப்புதளங்கள் போன்றவாற்றுக்காக அரசு கையகப்படுத்தியுள்ளமைவிவசாயஉற்பத்தியில் வீழ்ச்சி நிலையை ஏற்படுத்தியுள்ளது. அவற்றை சீர் செய்வதற்கான திட்டங்களை வகுக்குமாறு அரசிடம் நாடாளுமன்ற உறுப்பினர் கேட்டிருந்தார்.

கடந்தகால ஆட்சியாளர்களால் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வருகின்ற பொத்துவில் பிரதேசமக்களின் குடிநீர் பிரச்சினை மற்றும் நீர்ப்பாசன பிரச்சினைக்கான தீர்வு திட்டமாக ஹெட ஓயா திட்டம் மக்களுக்கு மிகுந்த பிரயோசனத்தை வழங்கக்கூடியதாக காணப்படுவதால் அத்திட்டத்தை இந்த அரசாங்கம் விரைவாக கவனத்தில் கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

மேலும் குறித்த வரவு செலவுத் திட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு கிழக்கு மாகாணத்தின் தேவைகளை நிவர்த்திக்கும் வகையில் அதிக ஒதுக்கீடுகளை செய்யுமாறும் கேட்டுக் கொண்டார்.

# மாருதம் சஞ்சிகை வெளியீடு

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் 28 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், மாருதம் சஞ்சிகை வெளியீடும் சனிக்கிழமை வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

தமிழறிஞர் கலாநிதி தமிழ்மணி அகளங்கள் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பல்வேறு கலை கலாசார நிகழ்வுகள் இடம் பெற்றதோடு சாதனையாளர் கௌரவிப்பும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் த.மங்களேஸ்வரன் கலந்து கொண்டதோடு மாருதம் சஞ்சிகையின் அட்டைப்படத்தை இம்முறை அலங்கரித்த யாழ் பல்கலைக்கழக ஆங்கிலத்துறை விரிவுரையாளர் பேராசிரியர் ஸ்ரீகணேஷன் உட்பட பலரும் கலந்துகொண்டனர். 100



காலைக்கதிர் Kalaikkathir

# தேசிய நிர்மாண சங்கத்தின் விருது வழங்கும் நிகழ்வுகள்

(றமீஸ்)

இலங்கை தேசிய கட்டுமான சங்கத்தின் 28 ஆவது வருடாந்த விருது வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை அம்பாறை நகரில் இடம்பெற்றது.

தேசிய கட்டுமான சங்கத்தின் அம்பாறை, கல்முனை கிளையின் ஏற்பாட்டில் அதன் தலைவர் எம்.பி.எம்.ஹசீர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கட்டட மற்றும் நிர்மாணத்துறையில் நேர்த்தியாகவும், சிறந்த முறையிலும் பணிகளை முன்னெடுத்த நிறுவனங்களின் பிரதிநிதிகள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்திக்க அபேவிக்ரம பிரதம அதிதியாகவும், இலங்கை தேசிய கட்டுமான சங்கத்தின் தலைவர் டரிட்டன் போல், அம்பாறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் அசல ஹேரத் உள்ளிட்ட பொறியியலாளர்கள், தேசிய கட்டுமான சங்கத்தின் முக்கியஸ்தர்கள், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், அமைப்பின் பிராந்திய தவிசாளர்கள் என பலர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

இதன்போது கடந்த 2023ஃ2024 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் சிறந்த முறையில் நிர்மாணப் பணிகளை முன்னெடுத்த நிறுவனங்களுக்கு விருது மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் தேசிய கட்டுமான சங்கத்தின் அம்பாறை, கல்முனை கிளையின் தலைவர்களாக செயற்பட்டு சங்கத்தினை சிறப்பாக வழிநடத்தியமைக்காக அதன் முன்னாள்



தலைவர்களான ஐ.எல்.எம்.மிஜ்வாத், கே.எம்.சக்கரியா ஆகியோர் சிறப்பு விருது வழங்கி பாராட்டிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக கலந்துரையாடல்

(ஹஸ்பர்)

மேற்படி கலந்துரையாடல் ஐக்கிய தேசிய கட்சி கிண்ணியா பிரதேச சபைக்கான வேட்பாளர்களுக்கிடையிலான சந்திப்பு ஒன்று சனிக்கிழமை ஐக்கிய தேசிய கட்சியின் திருகோணமலை மாவட்ட தவிசாளரும், மூதூர் தொகுதி அமைப்பாளரும் முன்னாள் பிரதியமைச்சருமான அப்துல்லா மஹ்ரூப் அவர்களின் தலைமையில் நடை பெற்றது.

குறித்த சந்திப்பில் எதிர்கால உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் அதனுடன் இணைந்த பல்வேறு விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.





# யாழ் ஊடகர்கள் மீதான விசாரணை அடக்குமுறைக்கான முன்னேற்பாடு

## அகில இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கண்டனம்

தையிட்டி விகாரையை இடிக்க வாரீர் என சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட போலிச் செய்தி தொடர்பில் யாழ்ப்பாண ஊடகவியலாளர்களான பிரதீபன், பரதன் ஆகியோரிடம் பலாலிப் பொலிஸார் 6 மணித்தியாலங்களுக்கு மேல் விசாரணைகளை மேற்கொண்டுள்ளமை தொடர்பில் அகில இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கடும் அதிருப்தியையும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளது.

விசாரணைகளுக்கு அப்பால் மேற்படி ஊடகர்களின் தொலைபேசியைப் பரிசோதித்தமை ,அவர்களின் பிரத்தியேக செயற்பாடுகளை துருவித் துருவி விசாரித்தமை தமிழ் ஊடகவியலாளர்களை அச்சுறுத்தி அடிபணிந்து வைத்திருக்கச் செய்யும் மற்றுமொரு வேலையாகவே இருப்பதாக அகில இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கருதுகிறது.

வடக்கில் பணியாற்றும் ஊடகவியலாளர்கள் அந்தப்பகுதி பிரச்சினைகளை தைரியமாக பகிரங்கப்படுத்தி வரும் சூழ்நிலையில் சம்பந்தமேயில்லாத பிரச்சினைகளில் அவர்களை சம்பந்தப்படுத்துவது ஏற்புடையதல்ல.

மேற்படி இரண்டு ஊடகவியலாளர்கள் இருவர் மீதான அடக்குமுறை தொடர்பில் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவின் கவனத்திற்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ள ஒன்றியம் , இந்த இருவருக்கும் எதிர்காலத்தில் அச்சுறுத்தல்கள் ஏதாவது ஏற்படுமாயின் அரசாங்கமே அதற்கான பொறுப்பை ஏற்கவேண்டுமென வலியுறுத்தி கூறிவைக்க விரும்புகிறது. - என்றுள்ளது.






# யாழ்ப்பாணத்தில் ரயில் மீது கல்வீச்சு

## சந்தேகத்தில் மூவர் கைது

யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியில், ரயில் மீது தெடர்ச்சியாக கல் வீச்சு தாக்குதலை நடத்தி வந்தவர்கள் மூவர் சனிக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

யாழ். மாவட்ட பொலிஸ்மா அதிபர் காலிங்க ஜயசிங்கவின் கட்டளைக்கிணங்க, மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவின் தகவலுக்கு அமைய மூன்று பேர் யாழ்ப்பாண பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ் தேவி சனிக்கிழமை யாழ் நேக்கி வரும்பொழுது குறித்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. ரயில் வரும்போது அரியாலை பகுதியில் வைத்து கல் எறிவதை ரயிலில் சென்ற ஒருவர் தற்செயலாக படம் பிடிக்கும்போது அந்த தாக்குதல் வீடியோவில் பதிவாகியது.

ஏற்கனவே நடத்திய கல்வீச்சு தாக்குதலில் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார். இது குறித்து யாழ்ப்பாண ரயில் நிலையமும் முறைப்பாடு செய்ததை தொடர்ந்து குறித்த விடயம் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

15 -13 வயதுகளுக்குட்பட்ட சிறுவர்கள் மூன்று பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் பாடசாலைக்கும் ஒழுங்கீனமானவர்கள், ஏற்கனவே சிறு சிறு குற்றங்ளை புரிந்தவர்கள் எனபொலிஸ்தரப்புதகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்களை பெற்றோர்களின் உதவியுடன் சிறுவர் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

## நாளை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் , பொலிஸார் கொலைகாரர்களாக மாறுவதை எந்த சந்தர்ப்பத்திலும் நாங்கள் அனுமதிக்க முடியாது. இந்த ஆளும்தரப்பு ஏற்கனவே எதிர்கட்சியாகயிருந்தபோதுதீவிரமாகஎதிர்ப்பை தெரிவித்த ஒன்று என்பது முக்கியமானது என்றார்.

## தேசிய பாதுகாப்பை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் இந்த அரசுக்கு வழங்கியுள்ளனர் என அவர் தெரிவித்தார். எனவே, இந்தக் கொலைக் கும்பல்களையும், போதைப் பொருளை மையமாகக் கொண்ட ஆயுதக் கும்பல்நடவடிக்கைகளையும்ஆளும்தரப்பால் கையாள முடியாதுபோயுள்ளன. இதன் உச்சமாக நீதிமன்றத்தினுள்கூட கொலைகள் இடம்பெற்று வருகின்றன என்று எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

இன்று விவசாயிகளும் நுகர்வோரும் இடர்பாடுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

அரிசியைஅதிகவிலைகொடுத்துவாங்கும் நடவடிக்கை தொடர்பில் அரசிடம் தீர்வில்லை. விவசாயிகளின் உரிமைகளை பாதுகாக்க அரசாங்கத்தால் முடியாதுபோயுள்ளது. நெல் கொள்வனவுக்கு 5000 மில்லியன் ரூபாவே ஒதுக்கப்பட்டுள்ள போதிலும், இதற்கு இதை விட அதிக பணம் தேவைப்படுகிறது. நுகர்வோருக்கு நியாயமான விலையில் அரிசியை வழங்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு காணப்படுகின்றது. இதை மறந்து செயல்பட்டு வருகின்றனர். இந்த அரசாங்கத்தின் ஒரே நோக்கம் பாரிய அரிசி ஆலை உரிமையாளர்களை பாதுகாப்பதே தவிர, நுகர்வோரையோ விவசாயியையோ பாதுகாப்பது அல்ல.

பெண்களின் உரிமையைப் பாதுகாக்க வந்த நளின் ஹெவகே போன்றவர்கள் நாடாளுமன்றத்திலேயே பெண்களை இழிவுபடுத்துகிறார். தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வர நாட்டின் பெரும்பான்மையான பெண்களே அதிக ஆதரவை வழங்கினாலும், இன்று ஆளும்தரப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெண்களை இழிவுபடுத்தும் வகையில் பேசுகின்றனர். ஆளுந்தரப்பைச் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் நளின் ஹெவகே ஐக்கிய மக்கள் சக்தியின்நாடாளுமன்றஉறுப்பினர்ரோஹினி கவிரத்னவை அவமதித்து, அவமானப்படுத்தி பேசியுள்ளார். பெண்களின் பாதுகாப்பையும் பெண்களின்உரிமைகளையும்பாதுகாப்போம் என்று மேடைகளில் பிரஸ்தாபித்தாலும், இன்று பாராளுமன்றத்தில் பெண்களை இழிவுபடுத்துவதும், சகல பெண்களையும் இழிவுபடுத்துவதுமே அமைச்சர் நளின் ஹெவகே அவர்களின் ஒரே குறிக்கோளாக காணப்படுகின்றது. வார்த்தையின் உண்மையான அர்த்தத்தில் பெண்களின் சகல உரிமைகளையும் அதாவது அரசியல், பொருளாதாரம், சமூக, வேலை வாய்ப்பு மற்றும்தனிப்பட்டபாதுகாப்புஎனபெண்களின் ஒட்டுமொத்த உரிமையையும் உறுதி செய்வதற்கு உண்மையிலேயே பாடுபடும் ஒரே தரப்பு ஐக்கிய மக்கள் சக்தியே என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பாதாள உலக நடவடிக்கைகளை கட்டுப்படுத்த நாம் எமது ஆதரவை வழங்குவோம். வீதிகளில்செல்லும்சாதாரண மக்களின் கதி என்ன என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும். போதைப்பொருள் கடத்தல், கொள்ளை மற்றும் கொலைக் கலாச்சாரத்தைமுறியடிக்கஎதிர்க்கட்சியாகநாம் எமது பூரண ஆதரவை பெற்றுத் தருவோம். இதற்கான வேலைத்திட்டம் அரசாங்கத்திடம் இல்லாத காரணத்தினால், வாக்குறுதிகளை நிறைவேற்றாத இந்த அரசாங்கத்திற்கு நல்லதொரு பாடத்தை படிப்பிக்க எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வாக்குகளை பயன்படுத்தப்படுமாறு எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

## பேருந்திலிருந்து.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டுபிடிக்கப்படவில்லை.

இந்த தோட்டக்களில் 113 பிஸ்டல் தோட்டாக்கள், 9 ரி-56 தோட்டாக்கள் மற்றும் ரி-56 எல்.எம்.ஜி. தோட்டா ஒன்றும் காணப்பட்டுள்ளன. சந்தேக நபரைக் கைது செய்வதற்காக பண்டாரவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஆளும்தரப்புக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உணர்கின்றனர். இது கடந்த 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பதிவான 71 சதவீதத்தைவிடக் குறைவாகும்.

ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது 2024 ஜூலை மாதத்திலிருந்து 2025 பெப்ரவரி வரையான காலப்பகுதியில், அங்கீகாரம் வழங்காத மக்கள் தொகை 60 வீதத்திலிருந்து 16 சதவீதமாகக் (44 புள்ளிகள் குறைவு) குறைவடைந்துள்ளது. மேலும் இலங்கையின் பொருளாதாரமானது வீழ்ச்சிப்போக்கினை கொண்டுள்ளது என்ற நிலைப்பாட்டினை கொண்ட மக்களின் தொகையானது 65 சதவீதத்திலிருந்து 14 சதவீதமாகக் (51 புள்ளிகள் குறைவு) குறைவடைந்துள்ளது.

தற்போதைய ஆளும்தரப்புச் செயல்படும் முறையை நீங்கள் அங்கீகரிக்கிறீர்களா இல்லையா?' என்ற கேள்விக்கு, பதிலளித்தவர்களில் 62 சதவீதம் பேர் அதை 'அங்கீகரிப்பதாகக்' கூறினர், இது முன்னைய 24 சதவீதத்திலும் பார்க்க இரண்டு மடங்கிற்கும் அதிகம். பதிலளித்தவர்களில் 16 சதவீதம் பேர் மாத்திரம் இதை 'அங்கீகரிக்க மறுத்தனர்'. இது முன்னைய ஆய்வில் 60 சதவீதமாக இருந்தது.

ஒட்டுமொத்தமாக இலங்கையின் பொருளாதாரமானது முன்னேற்றமடைகிறதா அல்லது மோசமான நிலைக்கு செல்கிறதா?' என்றகேள்விக்குபதிலளித்தமக்கள்தொகையில் 55 வீதமானோர் 'முன்னேற்றமடைகிறதாகப்' பதிலளித்துள்ளனர். கடந்த 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்த கணிப்பீடானது 30 வீதமாகப் பதிவாகியிருந்தது. இலங்கையின் பொருளாதாரமானது 'மோசமான நிலைக்குச் செல்வதாக' 14 சதவீதம் பேர் மாத்திரமே கூறியுள்ளனர். இது முன்னர் 65 சதவீதமாக இருந்தது.

இலங்கையின்பொருளாதாரநிலவரமானது 'நல்ல நிலை' அல்லது 'சிறந்த நிலை' அல்லது 'மோசமான நிலையினைக்' கொண்டுள்ளதா என மதிப்பாய்வு செய்யுமாறு கேட்டுக்கொண்ட போது 35 வீதமானோர், பொருளாதாரமானது 'நல்ல நிலை' அல்லது 'சிறந்த நிலைமையை' கொண்டுள்ளது என தரப்படுத்தியுள்ளனர்.

கடந்த ஜூலை மாதம் 2024 ஆம் ஆண்டு 28 சதவீதமாகக் காணப்பட்ட நிலையில் தற்போது அதிகரித்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கதாகும். இதனிடையே, இலங்கையின் பொருளாதாரமானது வீழ்ச்சியான போக்கினையே கொண்டுள்ளது எனவும் 'மோசமான நிலையில்' காணப்படுவதாகவும் 47 சதவீதம் பேர் தரப்படுத்தியுள்ளனர். முன்னைய ஆய்வில் குறித்த பெறுபேறானது 71சதவீதமாகக் காணப்பட்டநிலையில்தற்போது24சதவீதமாகக் குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வெரிடேரிசர்ச்மூலம்ஒருங்கிணைக்கப்பட்ட கணக்கெடுப்பு கருவியின் ஒரு பகுதியாக இக் கருத்துக்கணிப்பு நடத்தப்படுகிறது. வாக்கெடுப்புக்கானபங்காளர்வான்கார்ட்சர்வே (பிரைவட்) லிமிடெட் ஆகும். இச்செயற்கருவி இலங்கையர்களின் உணர்வுகளை ஆய்வு செய்வதற்கான வாய்ப்பை ஏனைய நிறுவனங்களுக்கும் வழங்குகிறது.

நாடளாவிய ரீதியில் தனித்தனி குடும்பங்களில் இருந்து வயது வந்த இலங்கையர்கள் 1,050 பேரைக் கொண்ட பல கட்ட சமவாய்ப்பு பதில் மாதிரியை அடிப்படையாகக் கொண்டு, 2025 ஜனவரி மாதம் 31 ஆம் திகதி முதல் 2025 பெப்ரவரி 5 ஆம் திகதி வரை இந்தக் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது.

இக்கருத்துக்கணிப்பு 95சதவீதநம்பிக்கை இடைவெளியில் நூ3.0சதவீத அதிகபட்ச மாதிரி பிழைவரம்பைக் கொண்டிருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. செயற்படுத்தும்செயன்முறையில்ஏற்படக்கூடிய குறைபாடுகளால் இப்பிழைவரம்புகள் மேலும் பாதிக்கப்படலாம்.

## எம்.பிக்களுக்குப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ்மா அதிபருக்கு சபாநாயகர் அறிவித்திருந்தார். அதன்படி, அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்க ஆளும்தரப்பு முடிவு செய்துள்ளதாக சில ஊடகங்களில் செய்திகள் வெளிவந்திருந்தன. அது தொடர்பில் அமைச்சரிடத்தில் வினவியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்க்கட்சிநாடாளுமன்றஉறுப்பினர்களால் இது தொடர்பாக கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும், இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் குறித்து தொடர்புடைய கோரிக்கைகளைச் சமர்ப்பித்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிக்கை வழங்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கைகளை பரிசீலித்த பின்னர், தேவைப்பட்டால் மட்டுமே சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

இருப்பினும், ஆளுங்கட்சியின்எந்தவொரு உறுப்பினரும் பாதுகாப்பு தொடர்பாக எந்த கோரிக்கைகளையும் முன்வைக்கவில்லை என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிட்டார்.

தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் மற்றும் அவர்கள் பங்கேற்கும் நிகழ்வுகளுக்கு பொலிஸ் நிலைய மட்டத்தில் விசேட பாதுகாப்புத் திட்டத்தை செயல்படுத்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ஆனந்த விஜேபால மேலும் தெரிவித்தார்.

## லைகாவுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றுநீதிபதிகள்கொண்டஉயர்நீதிமன்ற அமர்வு, உண்மைகளை உறுதிப்படுத்த இந்த மனுவை மார்ச் 27 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உத்தரவிட்டது.

இந்த மனுவில் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறைஆணையம், தொலைத்தொடர்பு அமைச்சின் செயலாளர், இலங்கை மத்திய வங்கி மற்றும் இலஞ்ச ஒழிப்பு ஆணையம் உள்ளிட்ட பல தரப்பினர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

EAPநியுP மீடியா நெட்வொர்க் உட்பட நாட்டில் உள்ள பல ஊடக நிறுவனங்களை லைகா மொபைல் சட்டவிரோதமாக கையகப்படுத்தியுள்ளதாகமனுதாரர்கூறுகிறார்.

சம்பந்தப்பட்ட நிறுவனம் ஊடக நிறுவனங்களைகையகப்படுத்துவதில்உள்ளூர்சட்டத்தை மீறிச் செயற்பட்டதாகவும் பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டதாகவும் மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்த பிரதிவாதி நிறுவனத்தின் நடவடிக்கைகள் தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாக மனுதாரர் கூறுகிறார்.

இந்த நடவடிக்கையின் மூலம் தனது அடிப்படைமனிதஉரிமைகள்மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்குமாறும், சம்பந்தப்பட்ட ஊடக நிறுவனங்களை கையகப்படுத்தும் செயல்முறை குறித்து விசாரணை நடத்த இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு உத்தரவிடுமாறும் மனுதாரர் நீதிமன்றத்தை கோருகிறார்.

மேலும் இந்த நாட்டில் சம்பந்தப்பட்ட நிறுவனத்தால் கையகப்படுத்தப்பட்ட சொத்துக்களை கையகப்படுத்துமாறு அரசாங்கத்துக்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் மனுவில மேலும் கோரப்பட்டுள்ளது.

மனுதாரர் சார்பாக ஜனாதிபதி வழக்கறிஞர் உதித இகலஹேவா ஆஜராகும் அதே வேளையில், பிரதிவாதிநிறுவனம்சார்பாகஜனாதிபதிவழக்கறிஞர்சஞ்சய்ராஜரட்ணம்உள்ளிட்ட வழக்கறிஞர்கள் குழு ஆஜராகவுள்ளன.

## மேலும் 3....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தடுப்புக்காவல் உத்தரவுக்கு அமைவாக சந்தேகநபர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த மூவரும் அஸ்கிரிய, கம்பஹா மற்றும் உடுகம்பொல ஆகிய பகுதிகளில் கைதாகியுள்ளனர்.

கைதானவர்கள் 19, 22, 25 வயதினர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச்சூட்டுக்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியை தம் வசம் வைத்திருந்தமை முதல் குற்றம் இடம்பெறுவதற்கு முதல் நாளில் கொலையாளிக்குத் துப்பாக்கியை வழங்கிய வரையான குற்றச்சாட்டில் ஹொரணேகாரகே தமிந்து லக்ஷான் என்பவரும்

சம்பவத்தின்பின்னர்கொலையாளியையும் தப்பிச்சென்ற பெண்ணையும் முச்சக்கர வண்டியில் ஏற்றிச்சென்ற குற்றச்சாட்டில் தமித் அஞ்சன நயனஜித் மற்றும் சமோத் கிமிஹான ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் தப்பிச் செல்லப் பயன்படுத்தப்பட்ட முச்சக்கர வண்டியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கணேமுல்ல சஞ்சீவ கொலை தொடர்பில் இதுவரை 8 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## விசேட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சனிக்கிழமை இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுகத் வசந்த டி சில்வா, முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி டி.டி.டி.எல்.தனபால உள்ளிட்ட அங்கவீனமுற்ற சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் குழு இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

தேசியமற்றும்சர்வதேசவிதிமுறைகளைக் கவனத்திற்கொண்டு விசேட தேவைகள் உள்ளவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட ஒரு முன்மொழிவை அவர்கள் முன்வைத்ததுடன் விசேடதேவையுடையவர்களின்உரிமைகளை வலுப்படுத்துதல், விசேட தேவையுடைய பிள்ளைகளின் கல்வித் தரத்தை உயர்த்துதல் மற்றும் அவர்களுக்கான உயர்கல்வி நிலைகளை அறிமுகம் செய்தல் போன்ற பல விடயங்கள் குறித்து இந்த முன்மொழிவில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மதியிருக்கம் (ஒட்டிசம்) நோயால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் கல்வியை உயர்த்தவும், அநாதை பிள்ளைகளுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தவும் தற்போதைய அரசு 2025 வரவுசெலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதை பாராட்டினர்.

இங்கு கருத்துத் தெரிவித்த பிரதமர் தெரிவித்ததாவது:

விசேட தேவையுடையவர்கள் பொதுச் சமூகத்தில் இயல்பான வாழ்க்கையை முன்னெடுக்க தேவையான சமூக அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும். ஊடநயஜ ளசஷ் டயமெய திட்டத்தினூடாகவும் நாம் அதனை செய்ய எதிர்பார்க்கின்றோம்.

எமதுநாட்டில்பலகொள்கைகள்இருந்தாலும் அவை நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பதுதான் பிரச்சனை. நாம் பார்ப்பது போல், கொள்கைகளை செயற்படுத்துவதற்கு நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்பது இங்கு மிகவும் முக்கிய விடயம். அதுதான் 2025 வரவுசெலவுத்திட்டத்தில்பல்வேறுபணிகளுக்கு குறிப்பாக நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம்.

கல்வி அமைச்சின் மேற்பார்வையின் கீழ், விசேட தேவையுடைய பிள்ளைகளின் உயர் கல்வியை ஒரு தலைப்பாக மாற்றுவதற்கு எதிர்பார்க்கிறோம். அதற்கு தேவையானவர்களை நியமித்துள்ளோம்.

கல்வியில் ஒரு பாரிய மாற்றத்திற்கு நாம் இப்போது தயாராகி வருகிறோம். 2025-ம் ஆண்டு இது தொடர்பான கொள்கைகள் தயாரிக்கப்பட்டு, 2026-ல் இதை நடைமுறைப்படுத்தத் தொடங்குவோம். இது முழுமுறைமையையும்மாற்றும்நீண்டகாலத் திட்டம். நிச்சயமாக, விசேட தேவைகளைக் கொண்ட பிள்ளைகளின் கல்வி முறைக்கு விசேட கவனம் செலுத்தப்படும்.

அனைத்து பாடசாலைகளிலும் விசேட தேவையுடைய பிள்ளைகள் வழமை போன்று கல்வியில் ஈடுபடுவதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க எதிர்பார்க்கின்றோம். ஆனால் இது ஒரு பெரிய செயல்முறை. ஒரேயடியாக அதைச் செய்ய முடியாது, படிப்படியாக அந்த இலக்குகளை அடைவோம் என்று நம்புகிறோம்.

முதற்கட்ட நடவடிக்கையாக, ஒரு கல்வி நிர்வாக வலயத்தில் குறைந்தபட்சம் ஒரு பாடசாலையிலாவது இந்த பிள்ளைகளை கல்வி கற்க தகுதியுடையவர்களாக மாற்ற நாங்கள் பணியாற்றி வருகிறோம் என்றார்.

## 5 படகுகளுடன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டு வருகிறது.

அதன்படி முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது கைப்பற்றப்பட்ட குறித்த இந்திய மீனவர்கள் தலைமன்னார் துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டதுடன், மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் கடற்றொழில் பரிசோதகர்களிடம் ஒப்படைக்கப்பட உள்ளனர்.

இந்த நடவடிக்கையின் மூலம், இந்நாட்டு கடற்பரப்பிற்குள் நுழைந்து சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட பதினெட்டு (18) இந்திய மீன்பிடி படகுகள் மற்றும் நூற்று முப்பத்தொரு (131) இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய 2024 வருடாந்த அணிவகுப்பு மரியாதை, சோதனை

(பாறுக் ஷிஹான்)

கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தின் 2024 ஆண்டிற்கான வருடாந்த அணிவகுப்பு மரியாதை மற்றும் பரிசோதனை நிகழ்வு கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ரம்சீன் பக்கீர் தலைமையில் சனிக்கிழமை கல்முனை உவெஸ்லி பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு அம்பாறை மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் எச்.ஜி.டி.எஸ். அமரசிங்க பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன்கல்முனைபிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்ச ர் இப்னு அசார் நெறிப்படுத்தலில் அணிவகுப்பில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களின் அணிவகுப்பு மரியாதையை பார்வையிட்டு ஏற்றுக்கொண்டார்.

மேலும் பொலிஸாரால் பொது மக்களுக்குவழங்கப்படும்பொலிஸ் சேவை பிரிவு நிலையங்கள், சுற்று சூழல், பொலிஸ் உத்தியோகத்தர்களின் தங்குமிட அறைகளை பார்வையிட்டதுடன் பொலிஸார் பயன்படுத்தும் வாகனங்களையும் பரிசோதனை மேற்கொண்டார்.

இந்நிகழ்வில் பொலிஸ் உப பரிசோதகர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினர் எனப்பலர் கலந்து கொண்டனர்.



உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் விரைவில்
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு
●CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
●NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
●வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
●ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
●GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
340, Pointpedro Road, Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர் Kalaikkathir

# பேடன் பவலின் 168ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு 'கிளீன் சிறிலங்கா' வேலைத்திட்டம்

இங்கிலாந்தில் நாட்டில் 22.02.1857 ஆண்டு பிறந்த ராபர்ட் பேடன் பவல் அவர்கள் 1941 ஆம் ஜனவரி மாதம் எட்டாம் திகதி சாரணர் இயக்கத்தை உருவாக்கிய ராபர்ட் பேடன் பவல் அவர்களின் 168 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு கிளீன் சிறிலங்கா வேலைதிட்டம் நாடளாவிய ரீதியில் புகையிரத நிலையங்களை இலங்கை சாரணர் அணியினர் ஒன்றிணைந்து சிரமதானப் பணியை மேற்கொண்டு உள்ளனர்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் மோகனபவன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கிளீன் சிறிலங்கா வேலை திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். 316

# யாழ். ஆறுகால்மடம் பகுதியில் மோ. சைக்கிள் விபத்தில் சாவு

யாழ்ப்பாணம், ஆறுகால்மடம் வைரவர் கோவில் பகுதியில் வியாழக்கிழமை மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞனே உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞன் தனது நண்பனுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்தவேளை வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் எதிரே வந்த ஓட்டோவுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் படுகாயங்களுக்குள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற இளைஞன் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மறவன்புலோவில் 115 குடும்பங்களுக்கு உதவிப் பொருள்கள் வழங்கி வைப்பு

(சுபேசன்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மறவன்புலோ மத்திப் பகுதியைச் சேர்ந்த 115 குடும்பங்களுக்கு அண்மையில் அத்தியாவசிய உதவிப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

சுவிஸ் நாட்டைச் சேர்ந்த சஞ்சை மீரா சஞ்சிதா அவர்களின் நிதிப்பங்களிப்பில் ப.கணேஸ்வரன் ஊடாக மேற்படி உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# இளம் விவசாய விஞ்ஞானிகள் வட்டு. இந்துவில் கௌரவிப்பு

யாழ்ப்பாணம் வட்டு இந்துவின் இளம் விவசாயவிஞ்ஞானிகள் கௌரவிப்புநிகழ்வானது பாடசாலை முதல்வர் கு.லங்காபிரதீபன் தலைமையில் டாக்டர் ரட்ணம் நித்தியானந்தன் அனுசரனையுடன் யாழ். வட்டு இந்துக்கல்லூரியில் கடந்த புதன்கிழமை 12.00 மணிக்கு நடைபெற்றது.

இதில் அகில இலங்கைரீதியாக நடத்தப்பட்ட இளம் விவசாய விஞ்ஞானப்போட்டியில் தங்கப்பதக்கத்தைப் பெற்றஐந்து மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இதில் பிரதமவிருந்தினராக கலாநிதி ரட்ணம் நித்தியானந்தன்(இரட்ணம் பவுண்டேசன், லண்டன்) அவர்களும்

சிறப்பு விருந்தினர்களாக, எஸ்.ரமேஸ்( வேளாண்மை பயிற்றுவிப்பாளர், துணை அலுவலகம் வேளாண் இயக்குனர் ) பி.அருந்தவம் (சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் கல்வி வலயம்), ஏ.கோகுலராஜன் (யாழ்ப்பாண கள ஆய்வு மையம் முகாமையாளர்)



ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அத்தோடு பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்

கலந்து சிறப்பித்தனர். இந் நிகழ்வினை தலைமை தாங்கி நடத்திய பாடசாலை அதிபர் அந்நிகழ்விற்கு அனுசரனை வழங்கிய டாக்டர் நித்தியானந்தன் அவர்களுக்கு நன்றி கூறியதோடு வெற்றி பெற்ற மாணவர்களையும் வழிப்படுத்திய ஆசிரியரையும் தேவையான வழிகாட்டல்களை வழங்கிய சிறப்பு விருந்தினர்களையும் நன்றியுடன்

பாராட்டினார்.

அத்துடன் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்கள் உரையாற்றும் போது -

இன்று மாணவர்கள் பல சவால்களின் மத்தியில் தமது கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது எனவும் இந்த மாணவர்கள் அவற்றையும் தாண்டி சாதனையைப் புரிந்துள்ளார்கள் எனவும் பாராட்டியதோடு அவர்களை வழிப்படுத்திய

ஆசிரியரையும் ஒத்துழைப்பு நல்கிய பெற்றோர்களையும் பாராட்டினர்.

சிறப்புவிருந்தினர்கள் உரையாற்றும் போது, யாழ் மாவட்டத்தில் அதிகூடிய மாணவர்கள் தங்கப்பதக்கத்தைப் பெற்றுக்கொண்ட பாடசாலை யாழ்.வட்டு இந்துக்கல்லூரியாகும் எனவும் அதற்கு ஆசிரியரதும் மாணவர்களதும் அயராத உழைப்பே காரணம் எனவும்

கூறி இனிவரும் காலங்களிலும் இவர்கள்



பல வெற்றிகளைப் பெற வேண்டும் எனவும் வாழ்த்தினர்:-



# மலசலகூடத்தில் குழந்தையைப் பெற்று ஜன்னலால் அதை தூக்கி வீசிய கொடூரம்

## மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் 18 வயதுடைய மாணவி ஒருவர் மலசலகூடத்தில் குழந்தையை பெற்று ஜன்னல் வழியாக வீசிய சம்பவம் ஒன்று நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலையில் இடம்பெற்றுள்ளது.

இது பற்றி தெரியவருவதாவது -

18 வயதுடைய மாணவி ஒருவர் நிறைமாத கர்ப்பிணி என்பதை மறைத்து வயிற்று வலி எனத் தெரிவித்து சம்பவதினமான நேற்று அதிகாலை 3.30 மணியளவில் மட்டு. போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

வைத்தியர் சரியான முறையில் சோதணையிடாத நிலையில் மாணவிக்கு ஊசி மூலமாக வயிற்று வலிக்கான வலிநிவாரண மருந்து கொடுக்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து அதிகாலை 5 மணியளில் மாணவி மலசல கூடத்திற்கு சென்று குழந்தையை பெற்று ஜன்னல் வழியாக வீசியுள்ளார்.

குழந்தை ஜன்னலில் கீழ் உள்ள பிளேற்றில் வீழ்ந்து அழுகுரல் கேட்டதையடுத்து தாதியர்கள் அங்கு சென்று நிலையில் மாணவி குழந்தையை பெற்றுள்ளார் என அவர்களுக்கு தெரியவந்துள்ளது.

இதையடுத்து, குழந்தை மீட்கப்பட்டு அதிதீவிர சிகிச்சைப்பிரிவில்சிகிச்சையளிக்கப்பட்டுவருவதுடன், தாய்க்கும் சிகிச்சையளிக்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த குழந்தையும் தாயும் பாதுகாப்பாக உள்ளதாக மட்டு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் திருமதி கலாறஞ்சினி கணேசலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வைத்தியசாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அபிவிருத்தி முன்மொழிவுகள் கல்முனையில் சமர்ப்பிப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)



கல்முனைத் தொகுதியில் பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகமுமான ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

இதன் ஓர் அங்கமாக அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தன்னால் முன்மொழியப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட சில அவசர வேலைத் திட்டங்களுக்கான நகல் வரைவுகளை அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்திக அபேவிக்ரமவிடம் அவர் சமர்ப்பித்துள்ளார்.

இவற்றுள் வாகன நெரிசல் மிக்க சாய்ந்தமருது நகரில் வர்த்தக நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக அங்கு வாகனத் தரிப்பிடம் ஒன்றை அமைப்பதற்கும் கல்முனை மாநகரில் வெஸ்லி உயர்தர பாடசாலைக்கு முன்பாக போக்குவரத்து சமிக்ஞை கட்டமைப்பை அமைப்பதற்குமான முன்மொழிவுத்திட்டங்களையும் நிசாம் காரியப்பர் எம்.பி சமர்ப்பித்துள்ளார்.

அத்துடன் கல்முனை மாநகர மற்றும் மாளிகைக்காடு கடல் பகுதிகளில் கரைவலை மீன்பிடித் தொழிலுக்கு இடையூறாக காணப்படுகின்ற கற்கள் மற்றும் கழிவுகளை அகற்றல், கல்முனை மேல் நீதிமன்றத்தில் அமைந்துள்ள சட்டத்தரணிகளுக்கான நூலகத்தை டிஜிற்றல் மயப்படுத்தல், கல்முனை மாநகரில் உள்ளூர் மற்றும் சிறு கைத்தொழில் உற்பத்தியாளர்களை மேம்படுத்துவதற்காக தற்காலிக விற்பனை கூடங்களை அமைத்தல் போன்ற முன்மொழிவுகளையும் அம்பாறை மாவட்ட செயலாளரிடம் அவர் சமர்ப்பித்திருக்கிறார்.



காலைக்கதிர் Kalaikkathir

# சாதனையாளர்களை பாராட்டிக் கௌரவம்



சாய்ந்தமருது கமு/கமு/ லீடர் எம்.எச்.எம்.அஸ்ரப் வித்தியாலய புலமை சீட்டுக்களையும், இலக்கியவாதிகள், கலைஞர்கள், ஊடக ஆளுமைகள், கல்விமான்களை அல்- மீஸான் பௌண்டேஷன் ஸ்ரீலங்கா பாராட்டி கௌரவித்த 'லீடர் கிரிஸ்டல் ஹீரோஸ்-2025' நிகழ்வு அல்- மீஸான் பௌண்டேஷன் ஸ்ரீலங்கா ஆளுநர் சபை உறுப்பினர்களின் பிரசன்னத்துடன் நிறுவன தவிசாளர் நூருல் ஹுதா உமரின் தலைமையில் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை கல்வி வலய பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் பிரதம அதிதியாகவும் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கலை,கலாசார பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் பிரதம உரையாளராகவும், கௌரவ அதிதிகளாக சமுர்த்தி திணைக்கள பிரதம கணக்காளர் வை. ஹபிபுல்லாஹ், அம்பாறை அரசாங்க அதிபர் பிரிவின் பிரதம பொறியியலாளர் எந்திரி ஏ.எம். சாஹிர் அவர்களும் விசேட அதிதியாக கல்முனை கல்வி வலய பிரதி கல்வி பணிப்பாளர்களான எம்.எச்.எம். ஜாபீர், என். வருணியா, எம்.எச். றியாசா, எம்.எல்.எம்.முதர்ரிஸ், அஸ்மா அப்துல் மலிக் ஆகியோர் கலந்து கொண்டனர்.




மேலும் வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் எஸ்.எம்.எம். அன்ஸார், சாய்ந்தமருது கமு/கமு/ லீடர் எம்.எச்.எம்.அஸ்ரப் வித்தியாலய அதிபர் எம். ஐ.சம்சுதீன் அடங்களாக தேசிய பாடசாலைகளின் அதிபர்கள், அல்- மீஸான் பௌண்டேஷன் ஸ்ரீலங்கா ஆளுநர் சபை உறுப்பினர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதானிகள், சாய்ந்தமருது, நாவிதன்வெளி, கல்முனை கோட்ட அதிபர்கள், பிரதேச சமூக நல செயற்பாட்டாளர்கள், கல்விமான்கள், பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், பொதுமக்கள் என பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

இதன்போது சாய்ந்தமருது கமு/கமு/ லீடர் எம்.எச்.எம்.அஸ்ரப் வித்தியாலய புலமையாளர்கள், 2023 இல் கல்முனை கல்வி வலயம் தேசிய ரீதியாக சாதிக்க காரணமாக இருந்த வலயக்கல்வி பணிப்பாளர் எஸ்.எஸ். எஸ். நஜீம் , கல்முனை மாநகர சபை மற்றும் கல்முனை கல்வி வலய கணக்காளராக இருந்து பதவிஉயர்வுபெற்றவை. ஹபிபுல்லாஹ், ஊடக, கலை இலக்கிய, சமூக சேவைக்கு பங்களிப்பு செய்தவர்களை கௌரவிக்கப்பட்டதுடன் நினைவு மலரும் வெளியிடப்பட்டது.












இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.02.2025இல் வெளியிடப்பெற்றது